ISSN : *2456-821X* அவையம் 1 (2) 2017 P.No. : *55 - 60*

புதிய அவையம்

# தொல்காப்பியத்தில் ஊழ்வினைக் கோட்பாடுகள்

**சு. பிரேம்குமார்,**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*அரசு கலைக்கல்லூரி, திருவண்ணாமலை.*

**கட்டுரை பெறப்பட்டது: *30.11.2017*** **ஏற்கப்பட்டது : *18.12.2017***

*உடலெடுத்த உயிர்கள் அவ்வுடலைக் கொண்டு செய்யும் செயல்கள் வினைகளாகும். கன்மமாகிய இவ்வினைகள் உயிர்கள் செய்யும் தன்மைக்கேற்ப நல்வினை, தீவினை என இரண்டாய் நிற்கும். உயிரின் தோற்றக் காலந்தொட்டு கன்மம் உயிர்களைப் பற்றியுள்ளது. இது தோற்றக் கேடுகளற்றது. கன்மம் என்னும் சொல்லுக்குச் செயல் என்பது பொருளாகும். கன்மம் தமிழில் வினையெனக் குறிக்கப்பெறுகிறது. கன்மம், கருமம், வினை, செயல், தொழில் என்பன ஒரு பொருளன. ஆணவமலச் சேர்க்கையால் உயிர்கள் செய்யும் வினைகளின் தொகுப்பே கன்மம் என்பது.*

*உருவமுடைய உடலால் செய்யப்பெறும் வினை அருவத்தன்மை வாய்ந்தது. 'அருவாய வல்வினை' என்பது அப்பர் வாக்கு. வினையின் காரணமாக உயிர்கள் பிறவியில் சுழல்கின்றன. வினைப்பயனை நுகரும் உயிர்கள், பொருள்களின் மீது விருப்பும் வெறுப்பும் கொள்வதால் மீண்டும் பிறவிக்கு உள்ளாகின்றன. வினைப் பிறவிக்கும், பிறவி வினைக்கும் காரணமாகிப் பிறவி தொடர்கிறது. உயிர்கள் தாம் செய்த நல்வினை, தீவினை இரண்டும் உரிய பயன்களை நுகர பிறவி எடுக்கின்றன. ஒருவர் செய்த வினை அதே பிறவியிலோ அடுத்த பிறவியிலோ முன் பின்னாக நுகர்ச்சிக்கு வருகிறது.*

*இருவினைகள் உயிர்களின் பிறப்பு, இறப்புக்குக் காரணமாக அமைகின்றன. வினையின் காரணமாகப் பிறவியில் சுழலும் உயிர்கள் மேலும் வினைப் பயன்களை நுகரும். அப்போது உயிர்களுக்குப் பொருளின் மீது விருப்பு, வெறுப்பு உண்டாகும். அவை உயிர்களின் மறு பிறவிக்குக் காரணமாக அமைகின்றன. வினை பிறவிக்கும் பிறவி வினைக்கும் காரணமாக அமையப் பிறவி தொடர்ந்து வரும். இது மரத்திலிருந்து விதையும், விதையிலிருந்து மரமும் தோன்றுவதைப் போன்றது.*

புதிய அவையம்

*வினையாகிய நல்வினை, தீவினை ஆகியவற்றைச் செய்த உயிர்கள் அவ்வினைப் பயன்களைத் தவறாமல் நுகரும். ஒருவர் செய்த வினை எடுத்த பிறவியிலோ, அடுத்த பிறவியிலோ பயன்தரும். செய்யப்பட்ட வினை, செய்யப்பட்ட முறையின்றி முன்பின்னதாக நுகர்ச்சிக்கு வரும். இது வினையின் தன்மைக்கேற்ப நிகழ்வதாகும். இம்மை செய்தன இம்மை வரும். மறுபிறப்பில் வரும் காலம் நீட்டித்தும் அந்நீட்டிப்பில் செவ்வியுற்றும் வரும். வினை செய்த முறையிலும் மாறியும் வரும். முற்பிறவிகளில் செய்யப்பட்ட வினை இப்பிறவியிலும், இப்பிறவியில் செய்த வினை அடுத்தப் பிறவியிலும் பயன் தரும்.*

*உயிர்கள் பல என்பதும் அவை கொண்டுள்ள அறிவின் பகுப்பில் ஓரறிவுயிர் முதல் ஆறறிவு வரை உயிர்கள் தனித்தியங்கும் ஆற்றல் பெற்றன. உயிர் மிகப் பழமையானது. தான் செய்த வினையின்படியே வாழ்கிறது என்பதும் தொல்காப்பியர் கருத்து.*

***"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே***
***இரண்டறி வதுவே அதனொடு நாவே***
***மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே***
***நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே***
***ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே***
***ஆறறி வதுவே அவற்றொடு மனனே***
***நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"***

***(தொல்- மரபியல்-27)***

*என்னும் நூற்பாவில், ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு என்னும் பிரிப்பில் உயிர்கள் பல என்று தொல்காப்பியர் விளக்குகின்றார். மேலும்,*

***"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது***
***தான் அமர்ந்து வரூஉம் மேவற்றாகும்"***

***(தொல்-பொருளியல்-27)***

*என்ற நூற்பாவில் 'எல்லா உயிர்க்கும்' என்னும் தொடரால் உயிர்கள் பல என்று தொல்காப்பியர் குறித்ததோடு அவ்வுயிர் அடையும் இன்பம் என்பது அவ்வுடம்பின் மீது அவ்வுயிர் அமர்ந்த தன்மை(வினை)யினைப் பொருத்ததே எனக் கூறிச் செல்கிறார். தொல்காப்பியர் உயிர் இலக்கணம் பற்றி எழுத்து வகையில் கூறும்போதே, இவ்வுயிர்களின் இயக்கத்தையும் பதிய வைத்துள்ளார்.*

*உயிர் காண முடியாத பொருள் எனினும் உயிர் என்ற ஒன்று கட்டாயம் உண்டு. உயிரை உள்ளடக்கிய உடம்பின் அசைவுகள் அவ்வுயிரின் உண்மையை உணர்த்தும். இதனையே சேனாவரையர், **'உயிர் எத்தன்மைத்து என்று வினாயவழி உணர்தல் தன்மைத்து'** என்று கூறினார். (தொல்-கிளவியாக்கம்-13) உடம்பின் வழியாகவே உயிர் புலப்படும் என்னும் கருத்தில்,*

**"மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே"**

***(தொல்-எழுத்து-18)***

*என்று தொல்காப்பியர் கூறினார். இந்த மெய்யோடு உயிர் இயைந்து நின்றாலும், உயிர் தன் தன்மையிலிருந்து என்றும் மாறாது என்னும் கருத்தினை,*

**"மெய்யோடு இயையினும் உயிரியில் திரியா"**

***(தொல்-எழுத்து-10)***

*என்னும் நூற்பாவில் விளக்கியுள்ளார்.*

*தமிழ் இலக்கண ஆசிரியர்கள் தானாக இயங்க முடியாததை 'உடம்பு' அல்லது 'மெய்' என்றும், தானும் இயங்கிப் பிறிதொன்றையும் இயக்கும் தன்மையுடைதை 'உயிர்' என்றும் குறித்தனர். இவ்வுவமைகள் எழுத்திலக்கணத்திற்கும் பொருந்துகின்றன. சமயக் கருத்துக்களுக்கும் ஒத்து வருகின்றன. இக்கருத்தினைத் தொல்காப்பியர்,*

**"காலம் உலகம் உயிரே உடம்பே"**

***(தொல்-கிளவியாக்கம்-57)***

*என்னும் தொடரில் உயிர், உடம்பு என்று குறிக்கின்றார். மேலும் உடம்பில் உள்ள உயிர் சென்றுவிட்டால் உடம்பு பயனற்று வீழ்ந்துவிடும் என்னும் கருத்தினை,*

**"சென்ற உயிரின் நின்ற யாக்கை"**

***(தொல்-புறத்திணையியல்-71)***

*என்னும் தொடரால் விளக்குகின்றார். உயிர் தான் செய்த வினையின்படியே வாழ்கிறது என்னும் கருத்தினைத் தொல்காப்பியர்,*

**"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**

**ஒன்றி உயர்ந்த பால தானையின்**

**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப"**

***(தொல்-களவியல்-2)***

*என்னும் நூற்பாவில் விளக்குகிறார். 'ஒன்றி உயர்ந்த பால்' என்பது, ஈண்டு விதியைக் குறிக்கிறது. விதி தவிர, பால், வினை, ஊழ், முறை என்னும் சொற்கள் ஒரு பொருளைத் தரும். உயிரானது தாம் கொண்டு வந்த வினையை அனுபவிப்பதற்காக இறைவனால் உடல் கொடுக்கப்பட்டது. இந்த உலகம் ஒரு காலத்தில் அழியும் நிலை உடையது என்பது, சைவ சமயக் கொள்கை. இதனைத் தொல்காப்பியர்,*

**"பல்லாற்றானும் நில்லா உலகம்"**

***(தொல்-புறத்திணையியல்-18)***

*என்னும் தொடரில் குறிப்பிடுகின்றார். மேலும்,*

**“வினையின் நீங்கிய விளங்கிய அறிவின்**

**முனைவன் கண்டது முதல் நூலாகும்”**

***(தொல்-மரபியல்-96)***

*என்னும் மரபியல் நூற்பாவில் தொல்காப்பியர் இறை இலக்கணம் பேசுகிறார். இத்தகு இடங்களில், கடந்து இருப்பவன் இறைவன் என்றும், இயல்பாகவே வினையினின்று நீங்கியும் உணர்த்தப்படாமலே உணரும் அறிவும் உடையவன் இறைவன் என்றும் விளக்குகின்றார்.*

*சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள்களுள் ‘தளை’ என்பது ஒன்று. இதனைப் பாசம் என்று கூறுவர். ‘பாசத்தளை’ என்று திரிகடுகம் குறிக்கிறது. தொல்காப்பியர் கூற்றுப்படி ‘பால்வரை தெய்வம்’, ‘பாலது ஆணையின்’ என்று வரும் இடங்களில் பால் என்பது இத்தளையைத்தான் குறித்தது. மேலும் ‘வினையின் நீங்கி’ என்ற இடத்தில் உள்ள ‘வினை’ என்பதும் தளையைத்தான் குறித்தது. தொல்காப்பியர் வினைச்சொல் இலக்கணத்தையும், வினைத்தொகை இலக்கணத்தையும் கூறும்பொழுது,*

**“வினை எனப் படுவது வேற்றுமை கொள்ளாது**

**நினையுங் காலைக் காலமொடு தோன்றும்”**

***(தொல்-வினையியல்-1)***

**“வினையின் தொகுதி காலத்தியலும்”**

***(தொல்-எச்சவியல்-19)***

*என்று அமைக்கின்றார். வினைச் சொல்லானது வேற்றுமை உருபுகளை ஏற்று வராது என்றும், அது ஆராயும்பொழுது காலத்தைக் காட்டும் என்றும், வினைத்தொகையானது காலத்தின் வழியே உணரப்படும் என்றும் இந்நூற்பாக்களுக்கும் பொருள் கூறுவார். சைவ சமயம் கூறும் வினை என்னும் கர்மாவிற்கும் இந்நூற்பாக்களைப் பொருத்திக் காணலாம். ஒருவர் செய்த வினையானது பிறிதொருவருக்குப் போகாது என்பதையும் அவ்வினை உரிய காலம் வரும்பொழுது மட்டுமே பயன் நல்கும் என்பதனையும் ஈண்டுப் பொருத்திப் பார்க்கலாகிறது.*

*வினைக்கோட்பாடானது அறிவியல் தன்மையத்து என விளக்கும் அறிஞர் ‘குணா’ அவர்கள் தம்முடைய ‘வள்ளுவத்தின் வீழ்ச்சி’ என்ற நூலில் வினை குறித்து இவ்வாறு பதிவு செய்கின்றார்.*

**“அணுக்கள் புணர்வதும் பிரிவதுமே வினைக்கு அடிப்படையும் காரணமும் என்று சிறப்பியம் புகலும். பொருளும் பண்புமே வினைக்கு வழிகோலுவனவாம்”**

**“பொருளுங் குணமுகங் கரும மியற்றற்**

***குரிய ….. …………….. ……”***

*என்கிற சிறப்பியத்தின் கூற்றையே மணிமேகலை குறிப்பிடுகின்றது. ஆயினும் வினைக்குப் பண்பு இல்லையாம்.*

**“வினையறுத்து விளக்கமான அறிவைப் பெற்றுள்ள ஒரு சான்றோன்”** என்னும் பொருளில் வரும்,

**“வினையின் நீங்கிய விளங்கிய அறிவின்**

**முனைவன் கண்டது முதனூ லாகும்”**

என்ற தொல்காப்பிய நூற்பாவில், ‘பிறவிச் சுழற்சி முடிந்து உலகில் மீண்டும் வந்து பிறவாமை’ என்னும் நிலையே வினையறுப்பு என்றாகும் என்ற கருத்தே தொக்கி நிற்கின்றது. வினைச்சொல் இலக்கணத்தை வினைக் கொள்கையுடன் இணைத்து கூறும் அந்தத் தொல்காப்பியம்,

**“வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது**

**நினையுங் காலைக் காலமொடு தோன்றும்”**

என்று கூறும் **‘இடம், பொருள், காலம் என்று பாராது வினைக்குக் காரணமானவனை வந்தடையும் வினை முக்காலத்திற்கும் உரியது’** என்பதே அதன் பொருளாகும் என விளக்குவதோடு பிராமணிய வினைக் கோட்பாட்டைப் பிற்காலத்து அருகர்களும், புத்தர்களும் அப்படியே தழுவிக் கொண்டனர். **‘முன் செய்த வினை பின் வந்து உருக்காட்டாமல் போகாது’** என்ற பொருளில்,

**“உமை வினைவந் துருத்தலொழி யாதெனும்”**

என்று மணிமேகலை கூறும். **‘நல்வினை, தீவினை என்னும் இரண்டையும் விளைவிக்கும் இன்பமும், துன்பமும் என்ற இரு வழிகளையும் மாற்றி முன்செய்த நல்வினைப் பயன்களை நுகர்ந்து பிறப்பறுத்தலே வீடுபேறாகும்’ என்னும் பொருளில்,**

**“சீர்சா னல்வினை தீவினை யவைசெயும்**

**வருவழி யிரண்டையு மாற்றி முன்செய்**

**அருவினைப் பயனு பவித்தறுத் திடுதல்**

**அதுவீ டாகு மென்றனன்.”**

**என்ற அருக சமயக் குறவர்கள் கூறி வந்ததாகச் சொல்லும் மணிமேகலையில் வருவதைப் போன்ற குறிப்புகளும் அந்தக் கருத்தை உறுதிப்படுத்துகின்றன எனக் கூறிச் செல்வதோடு, ஊழும் வினையும் ஒன்று மற்றொன்றாகிய நிலையில் ‘ஊழ்வினை’ என்ற சொல்லாட்சி வந்ததாக விளக்குகிறார்.**

**“ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்”**

என்பதைப் போன்று தமிழிலக்கியத்தில் பல இடங்களில் வருவதே இதற்குச் சான்று கூறும். இதுபோன்ற சொல் மயக்கமும், பொருள் மயக்கமும் தோன்றுவதற்கு முந்திய தொல்காப்பியத்திலேயே ஊழ் வேறு, வினை வேறு என்னும் விளக்கம் உண்டு. அகத்தியத் தருக்க நூற்பாக்களின் வழியாக வெளிப்படும் சிறப்பியக் கருத்துகளும்கூட ஊழையும், வினையையும் பற்றிய அறிவியல் விளக்கத்தைத் தழுவியவை. காலம், உலகம், உயிர், மெய், பால்வரை தெய்வம்(ஊழ்), வினை, பூதம், ஞாயிறு, திங்கள், சொல் எனும் பத்து சொற்களும், அவற்றைப் போன்ற பிறவும் உயர்திணைச் சொற்களாயிருந்து, அவ்வுயர்திணைக்குரிய வினை

முடிவை ஏற்காமல், அஃறிணைப் பாலாகவே ஒலிக்கக் கூடியனவென்று தொல்காப்பியம் வரையறுக்கும். இதைக் கூறுகின்ற தொல்காப்பிய நூற்பாவில் வரும் ' பால்வரை தெய்வம்' என்னும் சொல்லிற்குப் பொருள் கூறும் சேனாவரையர் (கி.பி. 14ஆம் நூற்றாண்டு)

**'பால்வரை தெய்வ' மென்பது எல்லார்க்கும் மின்ப துன்பத்திற்குக் காரணமாகிய இருவினையையும் வகுப்பது; 'வினை' என்பது அறத்தெய்வம்'** என்று பொருள் கூறுகின்றார். நச்சினார்க்கினியரும் (கி. பி. 11ஆம் நூற்றாண்டு) கல்லாடனாரும் (கி.பி. 15 ஆம் நூற்றாண்டு) கூட இதே கருத்தைக் கூறுகின்றனர். ஊழும், வினையும் வெவ்வேறு என்பது இவற்றால் விளங்கும்.

தனி மாந்தன் செயல்பாடுகளுக்கும், தலையீடுகளுக்கும், ஊழ் என்ற இயற்கை இயங்கியல் கட்டுப்படாது என்னும் ஊழ்க் கோட்பாடும்; நல்வினை, தீவினை என்னும் இரு வினைகளின் தளைகளிலிருந்தும், அத்தளைகளால் வரும் பிறவிச் சுழற்சியிலிருந்தும் விடுபடும் வீடுபேற்றைத் தேடுதல் என்றமையும் அருக, புத்த வினைக் கோட்பாடும்; தீவினைக்குரிய கழுவாயைத் தேடுபவன் வாயிலாகத் தனியொருவனால் இறைவனின் வீட்டை அடைய முடியும் என்ற இறைப்பற்று (பக்தி) இயக்கத்தின் கொள்கையும் மிக நுட்பமாகவும், தெளிவாகவும் ஒன்று மற்றதிலிருந்து வேறானவை என நம்மால் உணர்ந்து கொள்ளலாகிறது.

*************